**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, SHENCOTTAH**

O.S.No.44/2019

Deposition of witness for PW1

| | | |
|---|---|---|
| Name | : | பார்வதி |
| Father's Name | : | மாரியப்பன் |
| Village | : | |
| Taluk | : | |
| Religion | : | |
| Age | : | 58 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 21.04.2026.

முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் வாதி. என்னுடைய முதல் விசாரணைக்காக நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இந்த நிரூபண வாக்குமூலம் என்னுடைய தகவலின் அடிப்படையிலேயே தயார் செய்யப்பட்டுள்ளது. நிரூபண வாக்குமூலத்தை படித்துப்பார்த்து உண்மை என உறுதி கூறி கையொப்பம் செய்துள்ளேன்.

1. 26.09.2001 ம் தேதியில் பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து குழலாமணி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 குறியீடு செய்யப்படுகிறது.

2. 02.06.2011 ம் தேதியில் தபசில் சொத்துக்களை பொறுத்து வாதி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் அசல் வா.சா.ஆ.2 குறியீடு செய்யப்படுகிறது.

3. 17.03.2005 ம் தேதியில் கல்யாணசுந்தரம் என்பவர் பிரதிவாதியின் கணவருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 குறியீடு செய்யப்படுகிறது.

4. 01.06.2011 ம் தேதியில் பிரதிவாதியின் கணவர் பிரதிவாதிக்கு எழுதிக்

கொடுத்த ஏற்பாட்டு ஆவணம் சார்பதிவாளர் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 குறியீடு செய்யப்படுகிறது.

5. 03.10.2018 ம் தேதியில் பிரதிவாதியின் கணவர் மற்றும் பிரதிவாதி மீது வாதி செங்கோட்டை காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவிற்கு புகார் ஏற்பு சான்றிதழ் வா.சா.ஆ.5 குறியீடு செய்யப்படுகிறது.

6. பிராது தபசில் சொத்துக்களை விளக்கும் மாதிரி வரைபடம் வா.சா.ஆ.6 குறியீடு செய்யப்படுகிறது.

7. வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் ஒப்பிடு செய்யப்பட்டு அதற்கான நகல் வா.சா.ஆ.7 குறியீடு செய்யப்படுகிறது.

8. 25.03.2014 ம் தேதியில் எதிர்வழக்குரை தபசில் சொத்தினை பொறுத்து பிரதிவாதியின் கணவர் முத்துகுமாருக்கு எதிராக கல்யாணசுந்தரம் செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 108/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சான்று நகல் வா.சா.ஆ.8 குறியீடு செய்யப்படுகிறது.

9. 25.03.2014 ம் தேதியில் எதிர்வழக்குரை தபசில் சொத்தினை பொறுத்து பிரதிவாதியின் கணவர் முத்துகுமாருக்கு எதிராக கல்யாணசுந்தரம் செங்கோட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 108/2013 ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை சான்று நகல் வா.சா.ஆ.9 குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

**ஒப்பம்/- K.N. குரு**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி**
**செங்கோட்டை**